# ‘மக்களிடையே எதிர்மறையான விளைவுகள் இருக்காது’

ஒரு சமயப் பிரிவினரைக் கொண்ட வெளிநாட்டுத் தீவிரவாத இயக்கம் ஒன்று சிங்கப்பூரில் தாக்குதல் நடத்தியுள்ளது. எங்கும் பதற்றம் நிலவுகிறது. ஒருவரை ஒருவர் சந்தேகமாகப் பார்க்கின்றனர்.

கருத்தாய்வில் கலந்துகொண்ட மக்களிடம் இந்தக் காட்சி விவரிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு ஒரு குறிப்பிட்ட சமயத்தினர் காரணமாக இருப்பதால், அவர்களுக்கு எதிராக மற்ற சமயத்தினர் பதிலடி கொடுப்பார்கள் என்று சிங்கப்பூரர்கள் கவலைப்படுவார்களா என்ற கேள்வியும் கேட்கப்பட்டது.

கொள்கை ஆய்வுக் கழகம் (ஐபிஎஸ்) நடத்திய இந்தக் கருத்தாய்வில் பங்கேற்றவர்கள் தந்த பதிலில், ஐந்து முஸ்லிம்கள் அல்லது முஸ்லிம் அல்லாதவர்களில் நால்வர், எந்தப் பதிலடியோ எதிர்ப்புக் குரலோ இடம்பெறாது என்று தெரிவித்தனர்.

சிங்கப்பூரர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இப்படிப்பட்ட சூழ்நிலையில் சம்பந்தப்பட்ட சமயத்தினருக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவிப்பார்கள் என்றும் ஆய்வு கூறியது.

நேற்று வெளியிடப்பட்ட கருத்தாய்வின் முடிவில், தாக்குதலுக்குப் பிறகு வெளிநாட்டுத் தீவிரவாத குழுவின் சமயத்தினரைச் சேர்ந்த சிங்கப்பூரர்கள் மீது இளையர்கள் சந்தேகப்பட மாட்டார்கள் என்றும் தெரியவந்தது.

கடந்த ஆண்டு ஐபிஎஸ் மேற்கொண்ட கருத்தாய்வில் 2,000க்கு மேற்பட்ட சிங்கப்பூரர்கள் பங்கேற்றனர்.

கிறிஸ்துவ, முஸ்லிம், பௌத்த, இந்து சமயக் குழுக்களின் பெயரில் தீவிரவாதக் குழு தங்கள் நாட்டில் தாக்குதல் நடத்தினால், சிங்கப்பூரர்கள் அதை எவ்வாறு எதிர்நோக்குவார்கள் என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு, இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

“சிங்கப்பூரர்களிடையே சமயங்களுக்கிடையிலான ஒற்றுமை வலுவாக இருப்பதை இந்த ஆய்வு காட்டுகிறது,” என்று ஐபிஎஸ் கழகத்தின் மூத்த ஆய்வாளர் டாக்டர் மேத்யூ மேத்யூஸ் கூறினார்.

ஒரு தாக்குதல் நிகழ்ந்தால் அதிலிருந்து மீண்டுவர குறைந்தது இரண்டிலிருந்து மூன்று ஆண்டுகள் வரை ஆகலாம் என்று சிங்கப்பூரர்கள் உணர்ந்துள்ளனர் என்றும் ஆய்வு கூறுகிறது.

தாக்குதலுக்குப் பிறகு, சிங்கப்பூரர்கள் என்ற முறையில் ஒரே மக்களாக சேர்ந்து செயல்படுவதற்கு எத்தனை காலம் பிடிக்கும் என்று கேட்கப்பட்டதற்கு ஆய்வில் பங்கேற்ற முஸ்லிம்கள் 3.62 ஆண்டுகள் என்று பதிலளித்தனர். இது மற்ற மூன்று சமயத்தினரைக் காட்டிலும் அதிகம்.

“தீவிரவாதத் தாக்குதலால் மற்ற சமயத்தினர் தங்களுக்கு எதிராகச் செயல்படுவார்களோ என்ற அச்சமே அவர்களை இவ்வாறு சொல்ல வைத்திருக்கிறது,” என்றனர் ஆய்வாளர்கள்.

தாக்குதல் நடத்தியவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் அவர்களுக்கும் சிங்கப்பூர் முஸ்லிம்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்ற காரணத்தால் மற்ற சமயத்தினர் அவர்களுக்கு ஆதரவளிக்க முன் வருவார்கள்.

தங்கள் ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்த அவர்கள் கூடுதல் நடவடிக்கை மேற்கொள்ளவும் முன்வருவார்கள் என்ற ஆய்வின் முடிவும் உற்சாகமளிக்கிறது என்றும் ஆய்வாளர்கள் கூறினர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.